# <u>செய்தி வெளியீடு</u>

**செய்தி வெளியீடு எண்.30/2024** **நாள் : 13.03.2024**

**நெம்மேலியில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தில் பிரதான குடிநீர் உந்துகுழாய்கள் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 15.03.2024 அன்று மதியம் 2 மணி முதல் 16.03.2024 அன்று அதிகாலை 2 மணி வரை மண்டலம்-11, 12, 13, 14 மற்றும் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், இராதா நகர் ஆகிய பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

## <u>சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்</u>

நெம்மேலியில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தில் பிரதான குடிநீர் உந்துகுழாய்கள் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் **15.03.2024 அன்று மதியம் 2 மணி முதல் 16.03.2024 அன்று அதிகாலை 2 மணி** வரை மண்டலம்-11, 12, 13, 14 மற்றும் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், இராதா நகர் ஆகிய பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| மண்டலம் -11 (வளசரவாக்கம்) | நந்தம்பாக்கம், வளசரவாக்கம், நொளம்பூர், இராமாபுரம் |
| மண்டலம் -12 (ஆலந்தூர்) | ஆலந்தூர் |
| மண்டலம் -13 (அடையாறு) | வேளச்சேரி, பள்ளிப்பட்டு |
| மண்டலம் -14 (பெருங்குடி) | பள்ளிக்கரணை, மடிப்பாக்கம், உள்ளகரம்-புழுதிவாக்கம் |
| தாம்பரம் மாநகராட்சி | பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், இராதா நகர் |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

……..2.

மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater